அலகு **8** காப்புகளும் ஒதுக்குகளும்

5GKFMU

## கற்றலின் நோக்கங்கள்

- காப்பு மற்றும் ஒதுக்குகளின் பொருள், வரைவிலக்கணம், வகைகள் மற்றும் காப்பு, ஒதுக்கு சார்ந்த தணிக்கையரின் கடமைகளை அறிந்துக் கொள்ளுதல்.
- காப்பு மற்றும் ஒதுக்கினை வேறுபடுத்துதல்.

**நினைவு கூறல்** RECAP

சென்ற பாடத்தில் தேய்மானத்தின் பொருள், வரைவிலக்கணம், தேய்மானத்திற்கான காரணங்கள், நோக்கம் மற்றும் பல்வேறு தேய்மான முறைகள் பற்றியும் தேய்மானம் சார்ந்த தணிக்கையரின் கடமைகள் குறித்தும் விளக்கப்பட்டது.

## 8.1 காப்புகள்

### 8.1.1 பொருள்

எதிர்பார்க்கும் அல்லது எதிர்பாரா செலவினங்கள், பொறுப்புகள் காரணமாக ஏற்படும் செவினங்களை ஈடுசெய்ய வருவாயின் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்வது காப்பு எனப்படும்.

எதிர்காலத்தில் ஏற்படும் என எதிர்பார்க்கும் அல்லது எதிர்பாரா செலவினங்களை ஈடுசெய்வதற்காக நடப்பாண்டின் வருவாயிலிருந்து அல்லது பங்காதாயம் பகிர்ந்து தராமல் சேர்ந்துள்ள வருவாயிலிருந்து குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு பகுதியை ஒதுக்குவது காப்பு ஆகும்.


### 8.1.2 வரைவிலக்கணம்

இந்திய நிறும சட்டத்தின் கூற்றுபடி "காப்பு என்பது தேய்மானம் நீக்கும் செலவினம் புதுப்பித்தல் அல்லது சொத்துகளின் மதிப்பு குறைவினால் ஏற்படும், செலவினங்கள் மற்றும் எதிர்பார்க்கும் பொறுப்புகளுக்காக ஈடுசெய்வதற்காக ஏற்படுத்தபடுவதில்லை" என கூறுகிறது.

அமெரிக்க கணக்கு நிறுவன கூற்றுப்படி "பகிர்ந்து தராத இலாபத்தின் ஒரு பகுதி காப்பு. இது பொதுவான அல்லது குறிப்பிட்ட நோக்கத்திற்காக இலாபத்தின் ஒரு பகுதி ஒதுக்கீடு செய்யப்படுவது ஆகும்.



## 8.1.3 காப்புகளின் வகைகள்




1. **பொதுக்காப்பு:**

நிறுவனம் ஈட்டிய இலாபம் அல்லது நிறுவனத்தின் உபரி நிதியிலிருந்து எதிர்பாராத பொறுப்புகளை சரிக்கட்ட ஏற்படுத்துவதே பொதுக்காப்பு எனப்படும். இதனை சாட்டப்படாத காப்பு மற்றும் வருவாயினக்காப்பு என்றும் அழைக்கலாம். இது ஒரு பகிரப்படாத இலாபமாகும். நிறுமச்சட்டம் பொதுக்காப்பு ஏற்படுத்துவதை கட்டாயப்படுத்தவில்லை. நிறுவனம் போதுமான இலாபம் ஈட்டுகின்ற ஆண்டுகளில் மட்டுமே பொதுக்காப்பு உருவாக்கப்படுகிறது. சங்க நடைமுறை விதிகளின்படி இலாபம் பகிரப்படுவதற்கு முன் குறிப்பிட்ட இலாபத்தொகை பொதுக்காப்பிற்கு மாற்றப்படுகிறது.




### பொதுக்காப்பு ஏற்படுத்துவதற்கான நோக்கங்கள்

பொதுக்காப்பு பின்வரும் நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகிறது.

- கூடுதலான நடைமுறை மூலதனத்தை உருவாக்குதல்.
- நிறுவனத்தின் ரொக்கத் தன்மையை வலிமையாக்குதல்.
- எதிர்பாராமல் ஏற்படும் நட்டம் அல்லது பொறுப்புகளை சமாளித்தல்.
- சீரான பங்காதாயம் வழங்குதல்.
- நிறுவனத்தை பெரியதாக்குதல் அல்லது வளர்ச்சி அடையச்செய்தல்.

### பொதுக்காப்பும் தணிக்கையரின் கடமைகளும்

1. **செயல்முறை விதிகளை ஆராய்தல்:** பொதுக்காப்பு ஏற்படுத்துவது குறித்த விதிமுறைகள் செயல்முறை விதிகளில் உள்ளதா? என்பதை அறியும் நோக்குடன், செயல்முறை விதிகளை தணிக்கையர் ஆராய வேண்டும்.
2. **பொதுக்காப்பு ஏற்படுத்தும் விதம்:** நிறுவனம் ஈட்டிய இலாபத்திலிருந்துதான் பொதுக்காப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிய வேண்டும்.
3. **பொதுக்காப்பின் நோக்கம்:** நிறுவனத்தின் நலனுக்காகத்தான் பொதுக்காப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை தணிக்கையர் உறுதி செய்ய வேண்டும்.
4. **இருப்புநிலைக்குறிப்பில் வெளிப்படுத்துதல்:** பொதுக்காப்பு இருப்புநிலைக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் காண வேண்டும். மேலும் பொதுக்காப்புத் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தால், அவைகள் இருப்புநிலை குறிப்பின் சொத்துப்பகுதியில் இடம் பெற்றுள்ளதா? என்பதையும் தணிக்கையர் காணவேண்டும்.

5. **இயக்குனரவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பரிசீலனை செய்தல்:** பொதுக்காப்பு தொகையினை பயன்படுத்துவது சார்ந்த அனுமதி இயக்குனர் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதா? என்பதைஅறிந்திடும் பொருட்டு இயக்குனர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை தணிக்கையர் பார்வையிட வேண்டும்.

### 2. குறிப்பிட்ட காப்பு




எதிர்காலத்தில் நிச்சயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கின்ற நட்டங்கள் மற்றும் பொறுப்புகளை ஈடுசெய்ய உருவாக்கப்படும் காப்பு குறிப்பிட்ட காப்பு எனப்படும். சுருங்கக்கூறின், நிறுவனம் இலாபம் ஈட்டினாலும், நட்டம் ஈட்டினாலும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்படும் காப்பு குறிப்பிட்ட காப்பு ஆகும். உதாரணம் பங்காதாய சமன்பாட்டு காப்பு, கடனீட்டுப்பத்திர மீட்பு காப்பு, இயந்திர மாற்றுகை காப்பு, முதலீட்டு மாற்றுகை காப்பு. குறிப்பிட்ட காப்புத் தொகை பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. நிறுவனம் இலாபம் ஈட்டினாலும், ஈட்டாவிட்டாலும் குறிப்பிட்ட காப்பு ஏற்படுத்தப்படுகிறது.

### குறிப்பிட்ட காப்பு ஏற்படுத்துவதற்கான நோக்கங்கள்

- தெரிந்து ஏற்படும் நட்டங்களான தேய்மானம், அதிகமான பழுது பார்ப்பு செலவு மற்றும் புதுப்பித்தலுக்கான செலவு போன்றவற்றை ஈடு செய்வது.
- எதிர்பார்க்கும் பொறுப்புகளான ஐயக்கடன் ஒதுக்கு, கடனாளிகள் மீதான வட்டம், சர்ச்சைகளுக்கு உட்பட்ட கோருரிமை, தொழிலாளர் நட்ட ஈட்டு சட்டத்தின் படி ஏற்படும் இழப்புகளை ஈடு செய்வது.
- கொடுக்கப்பட வேண்டிய சம்பளம், கூலி, வருமான வரி போன்றவைகளை ஈடு செய்வது.

### தணிக்கையரின் கடமைகள்




1. **செயல்முறை விதிகளை சரிபார்த்தல்:** குறிப்பிட்ட காப்பிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை குறித்து செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிய வேண்டும்.
2. **இயக்குநர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை ஒப்பு நோக்குதல்:** குறிப்பிட்ட காப்பிற்கு ஒதுக்க வேண்டிய தொகை குறித்து இயக்குனர் அவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அறியும் பொருட்டு தணிக்கையாளர் இயக்குநர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பார்க்க வேண்டும்.
3. **ஒதுக்கு தொகையினை சரிப்பார்த்தல்:** எதிர்பார்க்கும் நட்டத்தை ஈடு செய்யும் வகையில் ஒதுக்கு உருவாக்கப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிந்திடல் வேண்டும். தொகை போதுமானதாக



Auditing_TAM_Chapter-08.indd 129 12/23/2019 1:45:38 PM

இல்லை எனக் கருதினால் தணிக்கையர் தமது அறிக்கையில் இது குறித்து குறிப்பிடுதல் வேண்டும்.

4. **இருப்புநிலை குறிப்பில் வெளிப்படுத்துதல்:** குறிப்பிட்ட காப்புத்தொகை இருப்பு நிலை குறிப்பின் பொறுப்பு பகுதியில் காட்டப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிதல் வேண்டும்.

5. **காப்புத் தொகையினை பயன்படுத்துதல்:** எந்த நோக்கத்திற்காக குறிப்பிட்ட காப்புத்தொகை உருவாக்கப்பட்டுள்ளதோ? அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிய வேண்டும்.

### 3. முதலின காப்பு



முதலின இலாபத்திலிருந்து உருவாக்கப்படும் காப்பு முதலின காப்பாகும். நிறுமச்சட்டம் அட்டவணை III பகுதி VI முதலினக்காப்பினை பின்வருமாறு வரையறை செய்கிறது, “எக்காப்பினை பங்குநர்களுக்கு பகிர்ந்து தர முடியாதோ அதுவே முதலினக்காப்பாகும்”.

பின் வருபவைகள் முதலின இலாபமாக கருதப்படுகிறது.

- நிலை சொத்து விற்பனையில் கிடைத்த இலாபம்
- நிலை சொத்து மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்ததால் கிடைத்த இலாபம்
- நிறுமத்தை கூட்டுருவாக்கம் செய்யும் முன் ஈட்டிய இலாபம்.
- ஒரு வியாபார நிறுவனத்தை வாங்கியதால் ஏற்பட்ட இலாபம்.
- கடனீட்டுப்பத்திரங்களை வட்டத்தில் மீட்டதால் கிடைத்த இலாபம்.
- பங்குகள் அல்லது கடனீட்டுப்பத்திரங்ளை முனைமத்தில் வெளியீடு செய்ததால் கிடைத்த இலாபம்.
- பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்ததால் கிடைத்த இலாபம்.
- தொழில் மூலம் அல்லாமல் ஈட்டிய இலாபம்.

முதலின இலாபம், பங்குநர்களுக்கு பகிர்ந்து தரப்படமாட்டாது. ஆனால் நிதி நிலையை வலிமைப்படுத்திக்கொள்வதற்காகவும், மூலதன நட்டங்கள் அல்லது அசாதாரண நட்டங்களை ஈடு செய்வற்காகவும் இக்காப்பு பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது.

#### முதலினக் காப்பின் நோக்கங்கள்

பின்வரும் நோக்கங்களுக்காக மூலதனக் காப்பு உருவாக்கப்படுகிறது.


1. செயல்முறை விதிகளுக்கு உட்பட்டு மேலூதியப் பங்குகளை வெளியீடு செய்தல்.
2. புலனாகச் சொத்துகளாகிய தொடக்கச் செலவுகள், நற்பெயர் ஆகியவற்றை கணக்கேடுகளிலிருந்து போக்கு எழுதுதல்.
3. கடனீட்டுப் பத்திரம் அல்லது முன்னுரிமைப் பங்குகளை முனைமத்தில் மீட்பு செய்தல்.
4. பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை வெளியீடு செய்தல் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளை போக்கு எழுதி கொள்வதற்கு.

#### தணிக்கையரின் கடமைகள்

1. **மூலதனக்காப்பு உருவாக்கப்படுதல்:** மூலதனக்காப்பு மூலதன இலாபத்திலிருந்துதான் உருவாக்கப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிதல் வேண்டும்.



Auditing_TAM_Chapter-08.indd 130 12/23/2019 1:45:39 PM




2. **மூலதனக்காப்பை பயன்படுத்துதல்:** நிறுமச் சட்டத்தின் படியும், செயல்முறை விதிகளின் படியும் மூலதனக்காப்பு பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிதல் வேண்டும்.
3. **இருப்பு நிலை குறிப்பில் காட்டுதல்:** முதலினக்காப்பு இருப்புநிலை குறிப்பில் வருவாயின காப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளதா? என்பதை கவனிக்க வேண்டும்.
4. **பத்திர மூதலீடு:** முதலினக்காப்புத் தொகை எளிதில் ரொக்கமாக மாற்றக் கூடிய பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா? அல்லது தொழில் நிறுவனத்திலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் காண வேண்டும்.
5. **இரகசியக் காப்பு**




இருப்புநிலைக்குறிப்பில் வெளிப்படையாக காட்டாமல் ஏற்படுத்தியிருக்கும் காப்பு இரகசியக்காப்பு ஆகும். இதனை "மறைகாப்பு" அல்லது "அகக்காப்பு" அல்லது "உள்காப்பு" என அழைக்கலாம். மூலதனம் மற்றும் பொறுப்புகளைக் காட்டிலும் அதிகமாக உள்ள சொத்துகளின் மதிப்பை இது உணர்த்தக்கூடியது. வங்கி, காப்பீடு, மின் உற்பத்தி நிறுவனங்களில் மட்டுமே இரகசியக்காப்பு உருவாக்கப்படுகிறது.

இரகசிய காப்பினை உருவாக்கும் நிறுவனத்தின் இருப்புநிலைக்குறிப்பு வெளிப்படுத்தும் நிதிநிலையை விட. நிறுவனத்தின் நிதிநிலைமை வலுவானதாக இருக்கும். தணிக்கையர் கணக்கேடுகளை முழுமையாக, ஆழ்ந்து பரிசீலனை செய்தால் மட்டுமே இரகசியக்காப்பு நிறுவனத்தில் உருவாக்கப்பட்டிருப்பது தெரியவரும்.



### மறைக்காப்பு உருவாக்கப்படுவதற்கான நோக்கங்கள்

பின்வரும் நோக்கங்களுக்காக மறைக்காப்பு உருவாக்கப்படுகிறது.

1. எதிர்காலத்தில் ஏற்படும் அசாதாரண நட்டங்களை பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்தாமல் மறைப்பது.
2. நடைமுறை மூலதனத்தை அதிகரித்து நிறுவனத்தின் நிதிநிலையை வலுப்படுத்துவது.
3. வியாபார போட்டியாளர்களிடமிருந்து நிறுவனத்தின் வளர்ச்சியை மறைப்பது.



Auditing_TAM_Chapter-08.indd 131 12/23/2019 1:45:42 PM


4. நட்டம் ஈட்டுகின்ற ஆண்டுகளிலும் பங்குநர்களுக்கு பங்காதாயம் வழங்குதல்.
5. எதிர்காலத்தில் எதிர்பாராமல் ஏற்படும் நிதி நட்டங்களை ஈடு செய்தல்.

### இரகசிய காப்பினை உருவாக்கும் முறைகள்

- சொத்துகளை அதன் அடக்க விலை அல்லது சந்தை விலையைவிட குறைவாக மதிப்பிடுவதன் மூலம்.
- தொடர்ந்து உயர்ந்து செல்லும் சொத்துகளின் மதிப்பை கணக்கேடுகளில் பதியாமல் விடுவதன் மூலம்.
- ஐயக்கடன் ஒதுக்கு மற்றும் கடனாளிகளுக்கான வட்ட ஒதுக்கு போன்றவைகளுக்கு தேவைக்கதிகமாக ஒதுக்கு ஏற்படுத்துவதன் மூலம்.
- நற்பெயரை உண்மையான மதிப்பை விட குறைந்து மதிப்பிடுவதன் மூலம்.
- இருப்பு நிலை குறிப்பில் சில சொத்துகளை எழுதாமல் விட்டு விடுதல் மூலம்.
- சொத்துகளை குறைத்து மதிப்பிடுதல் மூலம்
- மூலதனச் செலவுகளை நடப்புச் செலவுகளாக மாற்றி எழுதுவதன் மூலம்.
- பொறுப்புகளை மிகை மதிப்பீடு செய்வதன் மூலம்.
- கற்பனையான பொறுப்புகளை கணக்கேடுகளில் எழுதுவதன் மூலம்.
- நிகழ்வடையா பொறுப்புகளை உண்மையான பொறுப்புகளாக காட்டுவதன் மூலம்.

### தணிக்கையரின் கடமைகள்

1. **செயல்முறை விதிகளை சரிபார்த்தல்:** செயல்முறைவிதிகளை ஆராய்ந்து சட்டத்திற்குட்பட்டு இரகசியக்காப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிய வேண்டும்.
2. **உருவாக்கப்படும் விதம்:** இரகசியக்காப்பு உருவாக்கப்படும் விதம் மற்றும் இரகசியக்காப்பு ஏற்படுத்துவதற்கான நோக்கங்களை ஆய்வு செய்து, இதில் திருப்தி அடைந்தால் தணிக்கையர் இது குறித்து தமது அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.
3. **பங்குநர்களுக்கு தெரியப்படுத்துவது:** நிறுவனத்தில் மறைக்காப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை தணிக்கையர் பங்குநர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இல்லையெனில் பொய்யான அறிக்கைக்கு தணிக்கையாளர் சான்றளித்ததாக கருதப்படும்.
4. **நிறுமத்தின் கொள்கைகளை ஆய்வு செய்தல்:** நிறுவனத்தில் இரகசியக்காப்பு சொத்துகளின் மதிப்பை குறைத்தும் அல்லது பொறுப்புகளை மிகைபடுத்தி காட்டுவதன் மூலம் ஏற்படுத்தப்பட்டிருப்பின், தணிக்கையர் இது குறித்து இயக்குநர்களிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டும். மேலும் நிறுமத்தின் கொள்கைகளை பரிசீலிக்க வேண்டும்.





### 5. காப்பு நிதி

நிறுவனத்தின் உபரி நிதியிலிருந்து உருவாக்கப்பட்டு நிறுவனத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படுவதற்கு காப்பு நிதி என்று பெயர். இது பொதுகாப்பு போன்றது. இது உபரி தொகையிலிருந்து உருவாக்கப்படுகிறது. ஆனால் தொழிலிலேயே முதலீடு செய்யப்படுகிறது. வேறுவகையில் கூறுவதாயின் காப்பு நிதி பகிரப்படாத


Auditing_TAM_Chapter-08.indd 132 12/23/2019 1:45:42 PM

இலாபமாகும், இத்தொகை பாதுகாப்பான மற்றும் எளிதாக பணமாக மாற்றக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்யப்படுகிறது.

### தணிக்கையரின் கடமைகள்




1. **இயக்குநர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பரிசீலனை செய்தல்:** தணிக்கையர் இயக்குனர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பரிசீலனை செய்து காப்பு நிதித் தொகை முதலீடு செய்யப்பட்ட விதம் குறித்து பரிசீலிக்க வேண்டும்.
2. **முதலீட்டு பதிவேட்டை பரிசீலித்தல்:** தணிக்கையர் நேரடியாக முதலீடுகளை, முதலீட்டு பதிவேடுகளைக் கொண்டு சரிபார்க்க வேண்டும்.
3. **முதலீட்டு பத்திரங்கள்:** காப்பு நிதித்தொகை எளிதாக பணமாக மாற்றக் கூடிய முதலீடுகளில்முதலீடுசெய்யப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையர் அறிய வேண்டும்.
4. **இருப்பு நிலை குறிப்பின் மூலம் வெளிப்படுத்துதல்:** காப்பு நிதி இருப்பு நிலை குறிப்பின் பொறுப்பு பகுதியில் தனியாக காட்டப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிந்திட வேண்டும்.

### 6. சீர்மை நிதி

குறிப்பிட்ட கால முடிவில் குறிப்பிட்ட தொகையை பெறும் வகையில் முதலீடு செய்து



உருவாக்கப்படும் நிதி சீர்மை நிதியாகும். சீர்மை நிதியை பின்வருமாறு வரையறை செய்யலாம்.

"நீண்டக்காலக் கடனை தீர்க்க அல்லது தேய்ந்து வரும் மற்றும் பயனற்ற சொத்துகளை மாற்றுவதற்காக ஏற்படுத்தப்படும் நிதி சீர்மை நிதியாகும்".

சீர்மை நிதி உருவாக்கப்படுவதற்கான நோக்கங்கள்

சீர்மை நிதி பின்வரும் நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகிறது.


- பொறுப்புகளை குறைத்தல். உதாரணமாக கடனீட்டுப் பத்திர மீட்பு அல்லது கடனை தீர்த்தல்.
- பயனற்ற சொத்தினை மாற்றுவது.
- தேய்ந்துவரும் சொத்தினை மாற்றுவது.
- குத்தகையினை புதுப்பித்தல்.





Auditing_TAM_Chapter-08.indd 133 12/23/2019 1:45:44 PM

### தணிக்கையரின் கடமைகள்




1. **செயல்முறை விதிகளை பரிசீலித்தல்:** சீர்மைநிதியினை உருவாக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் விதம் குறித்து அறிந்துக்கொள்ள தணிக்கையர் செயல்முறை விதிகளை பரிசீலிக்க வேண்டும்.
2. **இயக்குநர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பரிசீலனை செய்தல்:** இயக்குனர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பரிசீலனை செய்து சீர்மை நிதிக்கு மாற்றப்பட்ட தொகையினை தணிக்கையர் அறிய வேண்டும்.
3. **முதலீடு தொகையினை பரிசீலித்தல்:** சீர்மை நிதிக்கு ஓதுக்கப்பட்ட தொகை முதலீடு செய்யப்பட்ட விதம் குறித்து தணிக்கையர் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் சரியான வட்டி வீதம் பெறப்படுகிறதா? என்பதையும் தணிக்கையர் அறிந்திட வேண்டும்.
4. **இருப்பு நிலை குறிப்பின் மூலம் வெளிப்படுத்துதல்:** சீர்மை நிதியும், சீர்மைநிதி முதலீடுகளும் இருப்புநிலைக்குறிப்பில் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிய வேண்டும்.

## 8.2 ஒதுக்குகள்

### 8.2.1 பொருள்

குறிப்பிட்ட சொத்து விற்பதால் அல்லது மதிப்பீடு செய்வதால் அல்லது சொத்தின் மதிப்பு குறைவதால் அல்லது சொத்தின் மீது ஏற்படும் தேய்மானத்தால் அல்லது பழுது மற்றும் பராமரிப்பு செலவு மேற்கொள்வதால் அல்லது சொத்தின் புதுப்பிப்புகளால் ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்ய உருவாக்கப்படுவதே ஒதுக்கு ஆகும்.

ஒதுக்கு தொகை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்படுகிறதோ, அந்த நோக்கத்திற்காக மட்டுமே அதனை பயன்படுத்த வேண்டும். இதனை குறிப்பிட்ட காப்பு என்றும் கூறலாம்.

**ஒதுக்குக்கான எடுத்துக்காட்டுகள்**

1. தேய்மான ஒதுக்கு
2. வரி ஒதுக்கு
3. ஐயக்கடன் ஒதுக்கு
4. கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு
5. பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தலுக்கான ஒதுக்கு

### 8.2.2 வரைவிலக்கணம்

இந்திய நிறும சட்டத்தின் கூற்றுப்படி "செலவினங்களை முழுமையாக நீக்கும் அல்லது தேய்மானம், மறுமதிப்பீடு செய்தல் அல்லது சொத்துக்கள் மீதான மதிப்பு குறைதல் அல்லது எதிர்பார்க்கும் பொறுப்புகளுக்கான செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்வது ஒதுக்கு எனப்படும்".

### 8.2.3 ஒதுக்குகளின் வகைகள்

ஒதுக்குகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **நட்டங்களுக்கான ஒதுக்குகள்:** நிறுவனங்களில் ஏற்படும் நட்டங்களை



Auditing_TAM_Chapter-08.indd 134 12/23/2019 1:45:44 PM

**ஒதுக்குகளின் வகைகள்**




ஈடு செய்ய ஏற்படுத்தப்படும் ஒதுக்கு இதுவாகும். உதாரணம்

i. நிலை சொத்து மீது ஏற்படும் தேய்மான நட்டம்

ii. பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் மூலம் ஏற்படும் நட்டம்.

2. **எதிர்பார்க்கின்ற நட்டத்திற்காக ஏற்படுத்தப்படும் ஒதுக்குகள்:** எதிர்காலத்தில் நிச்சயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கின்ற நட்டம் அல்லது இழப்புகளை ஈடு செய்ய உருவாக்கப்படும் காப்பு இது ஆகும். உதாரணம்

   i. வருமான வரி ஒதுக்கு

   ii. பங்காதாய ஒதுக்கு

   iii. கடனாளி மற்றும் கடனீந்தோர் மீதான வட்ட ஒதுக்கு

   iv. கொடுபட வேண்டிய சம்பளம், கூலி, ஓய்வு பெறும் தொழிலாளிகளுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிகொடை போன்றவைகளுக்கான ஒதுக்கு.

3. **எதிர்பாராத நட்டங்களுக்காக ஏற்படுத்தப்படும் ஒதுக்கு:** எதிர்காலத்தில் எதிர்பாராமல் ஏற்படும் நட்டங்கள் அல்லது இழப்புகளை ஈடு செய்ய இக்காப்பு உருவாக்கப்படுகிறது. உதாரணம்

   i. வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கு

   ii. நிறுவனத்திற்கு எதிரான இழப்பீடு கோருரிமை

   iii. உத்தரவாதத்திற்கான இழப்பீடு

   iv. இழப்பீடு தொகைக்கு எதிரான ஒதுக்கு

   v. பங்காதாய நிலுவைக்கான ஒதுக்கு

**பழுதுபார்த்தல், பதுப்பித்தலுக்கான ஒதுக்கு**

நிறுவனத்தில் உள்ள சொத்தின் வாழ்வுநாள் முழுமைக்கும் ஏற்படும் பழுதுபார்த்தல் மற்றும் புதுபித்தல் செலவுகளுக்கான ஒதுக்கீடு ஏற்படுத்துதல்.

**கடனாளி மற்றும் கடனீந்தோருக்கான வட்ட ஒதுக்கு**

குறிப்பிட்ட காலத்திற்குள் கடனாளிகளிடமிருந்து தொகை பெறுவதற்காக அனுமதிக்கப்படும் வட்டம் அல்லது கடனீந்தோருக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் பணம் செலுத்தி பெறக்கூடிய வட்டத்திற்கு ஒதுக்கீடு ஏற்படுத்துதல்.

**வாரா ஐயக்கடன் ஒதுக்கு**

கடனாளிகளிடமிருந்து பெறவேண்டிய தொகையில் முழுமையாகவோ அல்லது பகுதி தொகையோ பெறப்படாமலோ போகலாம். எதிர்பார்க்கின்ற இந்த நட்டத்திற்கு அடுத்த ஆண்டு இலாபத்தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 8.2.4 தணிக்கையரின் கடமைகள்

1. **செயல்முறை விதிகளை பரிசீலனை செய்தல்:** தணிக்கையர் செயல்முறை விதிகளை பரிசீலனை செய்து, போதுமான அளவிற்கு ஒதுக்கு ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா? என்பதை அறிதல் வேண்டும்.



Auditing_TAM_Chapter-08.indd 135 12/23/2019 1:45:44 PM


2. **இயக்குனர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை பரிசீலனை செய்தல்:** ஒதுக்கீடு உருவாக்கப்படுவதற்கு இயக்குனர் அவை அனுமதித்துள்ளதா? என்பதை அறிய இயக்குனர் அவையின் நிகழ்ச்சி குறிப்பேட்டை தணிக்கையர் பரிசீலிக்க வேண்டும்.

3. **நிதிநிலை அறிக்கையில் இடம் பெறச்செய்தல்:** அனைத்து வகை ஒதுக்குகளும் இலாபநட்ட கணக்கு மற்றும் இருப்பு நிலை குறிப்பில் இடம் பெற்றுள்ளதா? என்பதை தணிக்கையர் உறுதி செய்ய வேண்டும்.

4. **போதுமான அளவிற்கு ஒதுக்கீடு உள்ளதா என்பதை அறிதல்:** போதுமான அளவிற்கு ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை நிதி நிலை அறிக்கை மூலம் அறிதல் வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை குறைவாக இருப்பதாக தணிக்கையர் கருதினால், இதனை தமது அறிக்கையில் குறிப்பிடலாம்.

5. **ஆவணங்களை சரிப்பார்த்தல்:** நிறுவனத்தில் உள்ள ஆவணங்கள் அல்லது பதிவேடுகளை சரிப்பார்த்து, எதிர்காலத்தில் ஏற்படும் நட்டங்கள் அல்லது பொறுப்புகளுக்கு போதுமான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையர் அறிதல் வேண்டும்.

6. **குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்துதல்:** எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ, அந்த நோக்கத்திற்காக மட்டுமே அவை பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையர் அறிந்திட வேண்டும்.




## 8.3 காப்புக்கும் ஒதுக்கீட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

காப்பும், ஒதுக்கீடும் ஒன்று போல் தோன்றினாலும் ஆழ்ந்து நோக்கின் இவ்விரண்டும் பின்வரும் வகையில் வேறுபடுகிறது.



Auditing_TAM_Chapter-08.indd 136 12/23/2019 1:45:45 PM


| வரிசை எண் | அடிப்படை | காப்பு | ஒதுக்கு |
|---|---|---|---|
| 1 | பொருள் | எதிர்காலத்தில் ஏற்படும் என்று எதிர்பார்க்கின்ற அல்லது எதிர்பாராத பொறுப்புகளை ஈடு செய்துக் கொள்ள நடப்பு ஆண்டு இலாபம் அல்லது பகிரப்படாத இலாபத்திலிருந்து உருவாக்கப்படுவது காப்பு ஆகும். | எதிர்பார்க்கின்ற அல்லது எதிர்பாராத நட்டம் அல்லது பொறுப்புகளை ஈடு செய்ய இலாபத்தின் மீது ஏற்படுத்துவது ஒதுக்கு ஆகும். |
| 2 | ஏற்படுத்தும் விதம் | இலாப நட்ட பகிர்வு கணக்கில் பற்று வைத்து ஏற்படுத்தப்படுகிறது. | இலாப நட்ட கணக்கில் பற்று வைத்து ஏற்படுத்தப்படுகிறது. |
| 3 | தன்மை | எதிர்பாராத பொறுப்புகளை ஈடு செய்ய இது உருவாக்கப்படுகிறது. | எதிர்பார்க்கின்ற பொறுப்புகளை ஈடு செய்ய இது உருவாக்கப்படுகிறது. |
| 4 | நோக்கம் | நிறுவனத்தின் நிதி கொள்கையின் அடிப்படையில் இது உருவாக்கப்படுகிறது. கடனீட்டுப் பத்திர மீட்பு தவிர்த்து மற்றவைகளுக்கு தொகை நிர்ணயிக்கப்படுவதில்லை. | சட்டத்தின் படி இது உருவாக்கப்படுகிறது. |
| 5 | வெளிபடுத்துதல் | இருப்பு நிலை குறிப்பின் பொறுப்பு பகுதியில் காண்பிக்கப்படும். | இருப்பு நிலை குறிப்பின் சொத்து பகுதியில் குறிப்பிட்ட சொத்திலிருந்து கழித்து காண்பிக்கப்படும். உதாரணம் வாரா ஐயக்கடன் ஒதுக்கு இருப்பு நிலை குறிப்பில் சொத்து பகுதியில் கடனாளி தொகையிலிருந்து கழித்து காண்பிக்கப்படும். |



Auditing_TAM_Chapter-08.indd 137 12/23/2019 1:45:45 PM

| வரிசை எண் | அடிப்படை | காப்பு | ஒதுக்கு |
|---|---|---|---|
| 6 | இலாபத்துடன் தொடர்பு | இலாபத்தொகைக்கு ஏற்ப பொதுக்காப்பு நிர்ணயிக்கப்படுகிறது. நட்டம் ஈட்டிய ஆண்டுகளில் பொதுக் காப்பு ஏற்படுத்தப்படுவதில்லை. | இலாபம் ஈட்டினாலும் நட்டம் ஈட்டினாலும் ஒதுக்கு உருவாக்கப்படுகிறது. ஒதுக்கீடு இலாபத்திற்கு ஏற்ப தோற்றுவிக்கப் படுவதில்லை. |
| 7 | பங்குநர்களுக்கு செலுத்துதல் | பொதுக்காப்புத் தொகையினை பங்குநர்களுக்கு பங்காதாயமாக வழங்க முடியும். | ஒதுக்கு தொகையினை பங்குநர்களுக்கு பங்காதாயமாக வழங்க முடியாது. |
| 8 | தணிக்கையரின் கடமை | காப்பு உருவாக்குவதில் தணிக்கையர் தலையீடு செய்ய முடியாது. செயல்முறை விதிகளுக்கு ஏற்ப பொதுக்காப்பு உருவாக்கப்படுகிறது. | தேவையான அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? என்பதை தணிக்கையர் அறிய கடமைப்பட்டவர். |

## மாணவர்களின் செயல்பாடு



1. தொழிற்சாலைக்கு சென்று காப்பு உருவாக்கப்பட்டுள்ளதை குறித்து நிறுவன உரிமையாளர்கள் விவாதிக்க வேண்டும்.
2. உங்கள் பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை அறிந்து, குடும்பத்தில் எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளுக்கு காப்பு ஏற்படுத்துவதுக் குறித்து பெற்றோர்களுடன் விவாதிக்க.
3. எதிர்பார்க்கப்படும் நட்டங்களுக்கு ஒதுக்கு ஏற்படுத்தும் முக்கியத்துவம் குறித்து பெற்றோர்களுடன் விவாதிக்க.
4. மாணவர் நுகர்வோர் மன்றத்தில் காப்பு ஏற்படுத்தி நெருக்கடி சமயங்களில் எவ்வாறு பயன்படுத்துவது குறித்து மாணவர்களுடன் விவாதிக்க.



Auditing_TAM_Chapter-08.indd 138 12/23/2019 1:45:46 PM

## பாடச்சுருக்கம்

எதிர்பார்க்கின்ற அல்லது எதிர்பாராத பொறுப்புகளை ஈடுசெய்ய நடப்பு ஆண்டு அல்லது சேர்த்துவைத்த இலாபத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் தொகை காப்பு ஆகும். இதனை (1) பொதுக்காப்பு, (2) குறிப்பிட்டக்காப்பு, (3) மூலதனக்காப்பு, (4) இரகசியக்காப்பு, (5) காப்புநிதி, (6) சீர்மைநிதி என வகைப்படுத்தப்படுகிறது.

நிச்சயம் ஏற்படும் மற்றும் எதிர்பாராத பொறுப்புகளை ஈடு செய்ய இலாபத்தின் மீது ஏற்படுத்தப்படும் தொகை ஒதுக்கு ஆகும். இதனை (1) நட்டங்களுக்கான ஒதுக்கு, (2) எதிர்பார்க்கின்ற பொறுப்புகளுக்கான ஒதுக்கு, (3) எதிர்பாராத பொறுப்புகளுக்கான ஒதுக்கு என வகைப்படுத்தலாம். போதுமான அளவிற்கு நட்டம் அல்லது பொறுப்புகளை ஈடு செய்யும் வகையில் ஒதுக்கீடு உள்ளதா? என்பதை தணிக்கையர் அறிதல் வேண்டும்.

## கலைச்சொற்கள்

- ***காப்பு:*** எதிர்கால நலனுக்காவும், அவசர தேவைக்கு பயன்படுத்த இது தோற்றுவிக்கப்படுகிறது.
- ***பொதுக்காப்பு:*** நடைமுறை மூலதனத்தை அதிகப்படுத்த இலாபத்திலிருந்து இது உருவாக்கப்படுகிறது.
- ***சீர்மை நிதி:*** நீண்டக்கால கடனை தீர்க்க ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.
- ***மூலதனக்காப்பு:*** மூலதன இலாபத்திலிருந்து உருவாக்கப்படுவது.
- ***இரகசியக்காப்பு:*** இருப்பு நிலைக்குறிப்பில் வெளிப்படையாகக் காட்டாமல் தோற்றுவிக்கப்படும் காப்பாகும்.
- ***ஒதுக்கு:*** தெரிந்து ஏற்படம் நட்டத்தினை ஈடு செய்ய உருவாக்கப்படுவது ஒதுக்கு ஆகும்.

## மதிப்பீடு

HD7ACQ

**I. *சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.***

1. காப்பு என்பதன் பொருள் ______________
   அ) எதிர்கால அவசர தேவைகளை ஈடு செய்தல்
   ஆ) செலவுகளை மேற்கொள்ள
   இ) பொறுப்புகளை தீர்க்க
   ஈ) மேற்சொன்ன அணைத்தும்

2. ______________ நடைமுறைமூலதனத்தை கூடுதலாக்கும்.
   அ) பொதுக்காப்பு
   ஆ) சீர்மைநிதி
   இ) குறிப்பிட்டக்காப்பு
   ஈ) இரகசியக்காப்பு



Auditing_TAM_Chapter-08.indd 139 12/23/2019 1:45:46 PM

3. எதிர்பாராத அல்லது எதிர்பார்க்கின்ற நட்டங்களை ஈடு செய்ய உருவாக்கப்படுவது ______
   அ) குறிப்பிட்டக்காப்பு
   ஆ) பொதுக்காப்பு
   இ) ஒதுக்கீடு
   ஈ) சீர்மைநிதி

4. நீண்டக்கால கடனை தீர்க்க அல்லது பயனற்ற, தேய்ந்து போகக்கூடிய சொத்தினை மாற்ற உருவாக்கப்படும் நிதி ______
   அ) பொது நிதி
   ஆ) சிறப்பு நிதி
   இ) மீட்பு நிதி
   ஈ) சீர்மை நிதி

5. குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டு, பங்காதாயம் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட முடியாதது ______
   அ) வளர்ச்சி நிதி
   ஆ) சிறப்பு நிதி
   இ) பொது நிதி
   ஈ) சீர்மை நிதி

6. மூலதன இலாபத்திலிருந்து உருவாக்கப்படுவது ______
   அ) மூலதனக்காப்பு
   ஆ) குறிப்பிட்டக்காப்பு
   இ) பொதுக்காப்பு
   ஈ) இவைகள் ஏதும் இல்லை

7. இருப்பு நிலைக்குறிப்பில் தோன்றாதக்காப்பு ______
   அ) இரகசியக்காப்பு
   ஆ) பொதுக்காப்பு
   இ) குறிப்பிட்டக்காப்பு
   ஈ) சீர்மை காப்பு

8. இரகசியக்காப்பு ஏற்படுத்துவதன் நோக்கம் ______
   அ) போட்டியாளர்களை தவிர்த்தல்
   ஆ) பங்காதாயத்தை முறையாக வழங்குதல்
   இ) எதிர்பாராத நெருக்கடிகளை சமாளித்தல்
   ஈ) மேற்சொன்ன அனைத்தும்

9. குறிப்பிட்ட நட்டங்களை ஈடு செய்யவும், எதிர்பாராத பொறுப்புகளை சமாளிக்கவும் இலாபத்தின் மீது ஏற்படுத்தப்படும் காப்பு ______
   அ) பொதுக்காப்பு
   ஆ) குறிப்பிட்டக்காப்பு
   இ) மூலதனக்காப்பு
   ஈ) காப்பு நிதி

10. காப்பு நிதி மற்றும் சீர்மை நிதி இருப்பு நிலை குறிப்பில் ______ பகுதியில் இடம் பெறும்.
   அ) சொத்து
   ஆ) பொறுப்பு
   இ) இரண்டு
   ஈ) இவைகள் ஏதுமில்லை

**விடைகள் 1. (ஈ), 2. (அ) 3. (அ), 4. (ஆ) 5. (அ) 6. (அ) 7. (அ) 8. (ஈ) 9. (ஆ) 10. (ஆ)**

## II. குறு வினாக்கள்

1. காப்பு என்றால் என்ன?
2. “காப்பு” வரையறை செய்க.
3. காப்புகளை வகைப்படுத்துக.
4. மூலதனக் காப்பு என்றால் என்ன?

5. இரகசியக் காப்பு என்றால் என்ன?
6. சீர்மை நிதி – சிறு குறிப்பு தருக.
7. ஒதுக்கு என்றால் என்ன?
8. “ஒதுக்கு” வரையறை செய்க.

**III. சிறு வினாக்கள்**

1. பொதுக்காப்பு என்றால் என்ன? இது எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது?
2. மூலதனக்காப்பு எவ்வாறு தோற்றுவிக்கப்படுகிறது.
3. இரகசியக்காப்பு எவ்வாறு தோற்றுவிக்கப்படுகிறது.
4. மூலதனக்காப்பு தொடர்பான தணிக்கையரின் கடமைகளை விளக்குக.
5. சீர்மை நிதி தொடர்பான தணிக்கையரின் கடமைகளை கூறுக.
6. இரகசியக்காப்பு தொடர்பான தணிக்கையரின் கடமைகள் யாது?
7. ஒதுக்குகளின் வகைகளை விளக்குக.

**IV. கட்டுரை வினாக்கள்**

1. காப்புகளின் வகைகளை விளக்குக.
2. இரகசியக்காப்பு தோற்றுவிப்பினால் ஏற்படும் ஆபத்துகள் என்ன?
3. ஒதுக்கு சார்ந்த தணிக்கையரின் கடமைகளை விளக்குக.
4. காப்பு குறித்த தணிக்கையரின் கடமைகளை விவாதிக்க.
5. காப்பு – ஒதுக்கு வேறுபடுத்துக.

### மேற்கோள் நூல்கள்

1. Practical Auditing – B.N. Tandon and Others, S.Chand Publication.
2. Principles and Practice of Auditing – Dinkar Pagare, Sultan Chand & Son’s.
3. Practical Auditing – Dr.G.Anitha & Dr.J.Sankari, Sri Selva Publishers Distributors.
4. Practical Auditing – Dr. L. Natarajan, Margham Publications, Chennai.
5. Auditing – Study Material, The Institute of Cost Accountants of India.



Auditing_TAM_Chapter-08.indd 141 12/23/2019 1:45:46 PM